www.tamilarangam.net

# துக்ளக்

ஆசிரியர் : சோ THUGLAK Tamil Fortnightly 15·5·86 ரூ.1-50




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலிகள் ஈழத்தில் நடாத்திய கொலைகளை நியாயப்படுத்தி பல "கதைகள்" கூறிவருகின்றனர். அவை அக் கொலைகளைப் பற்றி நடுநிலையான செய்திப் பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகளை படித்து உண்மையை அறியுங்கள்.,,

தினமலர் -10-5-1986




புலியின் கோழைத்தனம். 3/6 தினமணி

இலங்கையில் இருக்கும் சபாரத்தினத்தை அந்நாட்டின் பாதுகாப்புப்படை வலை போட்டுத்தேடும். அதே நேரத்தில், பிரபாகரன் சென்னையில் பத்திரமாக இருந்துகொண்டு, 'சபாரத்தினத்தின் மீது தாக்குதல் நடத்தச் சொல்லியிருக்கிறார். இது கோழைத்தனமான செயல்.

தனி ஈழம் அமைய வேண்டும் என்பதற்காக, தங்கள் உயிரை தியாகம் செய்ய தயாராக இருந்த ஈழப்போராளிகளின் கனவுகள் ஒரு மனிதரின் (பிரபாகரன்) திட்டத்தால் அழிக்கப்பட்டுள்ளது. எல்லா தமிழர் தலைவர்களையும் தீர்த்துக் கட்டிவிட்டு, தான புகழடைய வேண்டும் என்பதே அந்த மனிதரின் லட்சியம்

இளைஞர் மணியின் காவலானை.. (8-5-86 தினமணி)

**யாழ்ப்பாணத்தில்**

யாழ்ப்பாணத்தில் பொது மக்கள் வீட்டை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டு உள்ளது. அப்படி மீறி வெளியே வருகிறவர்கள் சுட்டுக் கொல்லப்படுவார்கள் என்று எச்சரிக்கப்பட்டு இருக்கிறது.

இந்த அறிவிப்பை மீறி வெளியே வந்த 8 வயது, 10 வயது மதிக்கத்தக்க 4 சிறுவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

**சவ ஊர்வலத்துக்கு தடை**

சவ ஊர்வலம் எதிலும் யாரும் கலந்து கொள்ளக் கூடாது என்றும் எச்சரிக்கப்பட்டு உள்ளது. இதனல் யாழ்ப்பாணத்தில் மக்கள் வீட்டை விட்டு வெளியேற பயந்து உள்ளேயே அடைப்பட்டு கிடக்கிருர்கள். அங்கு மயான அமைதி நிலவுகிறது.

**துணிவான வீரர்**

சபாரத்தினம் துடிப்புள்ள இளைஞர். குட்டிமணி, ஜெகன் மரணத்துக்கு பிறகு அவர்கள் தலைமையில் இயங்கி வந்த தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை தலைமை தாங்கி திறம்பட நடத்தி வந்தார்.

(3-6-86 தினமணி)

**பிரபாகரன் மறுப்பு**

சபாரத்தினத்தை கொல்லும்படி விடுதலைப்புலிகளுக்கு கட்டளையிட்டதாக வெளிவந்துள்ள செய்தியை, அதன் தலைவர் பிரபாகரன் மறுத்து இருக்கிருர்.

"போராளிகள் மோதல் அரசு கவலை" தினமணி 2-5-86

போராளிகள் கோஷ்டிகளில் சில விளைவை எதிர்ப்பார்க்காமல் ஒரு கோஷ்டியை நசுக்க மற்ருெரு கோஷ்டி முயல்வதாக தெரிகிறது. இது அரசுக்கு கவலை அளிக்கிறது. ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மற்றும் கிழக்குப் பகுதி இத்தகையை மோதலால் மேலும் மோசமாக பாதிக்கப்படும் என்று அரசின் செய்தியொன்றில் கூறப்பட்டுள்ளது.

போராளிகளையும் மக்களையும் புலிகளிடமிருந்து காக்க இலங்கை அரசு நடவடிக்கை தினமணி 2-5-86

**அரசு உத்தரவு**

இதற்கிடையே, இந்த மோதல்கள் பற்றி கவலை தெரிவித்த இலங்கை அரசு, போட்டி கோஷ்டியால் தங்கள் உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சத்தினுல் சரணடைய விரும்பும் போராளிகளுக்கு பாதுகாப்பு அளிக்குமாறு பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதால், மக்களுக்கு உதவியும், பாதுகாப்பும் அளிக்க வேண்டிய கட்டாயத்துக்கு அரசு தள்ளப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"புலியின் தாகம் தீர்ந்தது"

மறைவிடத்தில் சபாரத்தினம் தூங்கிக் கொண்டிருந்தார். ராணுவத்தினர் அந்த இடத்தை சூழ்ந்து கொண்டனர். குண்டு மழை பொழிந்தனர். எந்திரதுப்பாக்கிகளால் சுட்டனர். ராக்கெட்டுகளையும், வெடிகுண்டுகளையும் வீசி தாக்குதல் நடத்தினுர்கள்.

தூங்கிக்கொண்டிருந்த சபாரத்தினம் துள்ளி எழுந்தார். வெறி பிடித்த ராணுவத்திடம் இருந்து தப்பிக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்ட அவர் சரண் அடைய முடிவு செய்தார். இரு கைகளையும் உயரே தூக்கியபடி வெளியே வந்தார்.

ஆனல் ராணுவம் நேர்மையை கடைப்பிடிக்கவில்லை. சபாரத்தினத்தை சுட்டு வீழ்த்தினுர்கள். இன்னெரு தளபதி ஐகுவாவும் கொல்லப்பட்டார்.